மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் பள்ளியில் மாணவர்கள் அங்கேயே தங்கிப் பயிலுவதற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு இருக்கின்றன. எனவே பார்வையற்ற மாணவர்கள் 60 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து பள்ளியிலே வந்து படிக்க வேண்டிய அவசியம் இல்லை. இதைப் போன்ற பார்வையற்ற குழந்தைகளுக்குக் கல்வி வசதியைச் செய்து தர சில தனியார் தொண்டு நிறுவனங்கள் மைய மாநில அரசினுடைய நிதி உதவியைப் பெற்று அவர்களும் செயல்படுத்தி வருகிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது ஒரு பகுதியிலே இதைப் போன்ற பள்ளிகள் அவசியம் தேவை என்று விரும்பினால், தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் அப்படிப்பட்ட பள்ளிகளை அமைப்பதற்கு அவர்கள் ஏற்பாடு செய்யலாம். மாணவர்கள் இப்போது பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் பள்ளியில் தங்கிப் பயில்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. யாராவது மாணவர்கள் அந்தப் பள்ளியில் தங்கிப் பயில வேண்டும் என்றால், சம்பந்தப்பட்டத் தலைமை ஆசிரியர் அவர்களை அணுகி அந்த மாணவர்களை அந்தப் பள்ளியிலே சேர்த்துப் பயில வைக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடவடிக்கை எடுக்கலாம்.

சத்துணவு மையங்களுக்கு முட்டைகள்

*3724 திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சத்துணவு மையங்களுக்கு வழங்க இருக்கும் முட்டைகளை தனியார் நிறுவனங்களில் வாங்கி விநியோகம் செய்யப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் சத்துணவு மையங்களுக்கு வழங்க இருக்கும் முட்டைகளை தனியார் நிறுவனங்களில் இருந்து வாங்கி வினியோகம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினா நேரம் சற்று நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 21]

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவு மையங்களில் முட்டைகளை சத்துணவு அமைப்பாளர்களே நேரில் சென்று வாங்கி வருவதால் முட்டைகள் அதிகமான அளவில் உடைந்து, அமைப்பாளர்கள் நஷ்டத்திற்கு உள்ளாகின்றனர். இதைப் போக்கும் வகையில், சத்துணவு மையங்களுக்கு ''டேப்கோ'' நிறுவனம் மூலமாக அரசு நேரடியாக விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டத்திற்கு உட்பட்ட மையங்களுக்கு முட்டைகளைப் பெற்று, வழங்குகிற, விநியோகம் செய்கிற உரிமை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 10 மாவட்டங்களில் ''டேப்கோ'' நிறுவனம் முட்டைகளை விநியோகம் செய்திருக்கிறார்கள். ''டேப்கோ'' நிறுவனம் விநியோகம் செய்கிற மாவட்டங்கள் தவிர, ஏனைய மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒப்பந்தம் மூலம் குறைந்த விலைக்கு முட்டைகளை விநியோகம் செய்கின்றவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் மூலமாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் முட்டைகள் வழங்கப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்திலிருந்து சத்துணவு மையங்களுக்கு முட்டைகளை எடுத்துச் செல்ல, முட்டைக்கு 5 பைசா வீதம் போக்குவரத்துச் செலவாக அரசு தந்து விடுகிறது. எனவே ஆங்காங்கே இருக்கக் கூடிய ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் வாகனங்களை அமர்த்தி முட்டைகளைச் சத்துணவு மையங்களுக்கே கொண்டு செல்ல வேண்டும் என்று அரசு உத்திரவிட்டிருக்கிறது. இது பல மாவட்டங்களில் பின்பற்றப்பட்டு வருகிறது. சில மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் சத்துணவு அமைப்பாளர்களை நேரடியாக ஒன்றியத்திற்கு வந்து முட்டைகளை எடுத்துச் செல்ல வேண்டுமென்று கூறுகிறார்கள். அதனால் அவர்களுக்குச் சிரமம் ஏற்படுகின்றது என்ற பிரச்சினை அரசின் கவனத்திற்கு வந்த பிறகு, ஒன்றிய ஆணையாளர்களுக்கு இப்போது அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் அமைப்பாளர்களை இந்த முட்டைகளை எடுத்துச் செல்கிற பணியில் ஈடுபடுத்தக் கூடாது, நீங்களே வாகனங்களுக்கு ஏற்பாடு செய்து மையங்களுக்கு முட்டைகளைக் கொண்டு போய் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். கூடிய விரைவில் எல்லா மாவட்டங்களிலும் இந்த முறை அமல்படுத்தப்படும்.

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சத்துணவு மையங்களுக்கு வழங்கப்படும் முட்டைகளுக்கு என்ன விலை கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்கு முட்டைகளை வழங்கு வதற்கு ஒரு குறிப்பிட்ட விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. அந்தந்த வாரம் N.E.C.C. —'National Egg Co-Ordination Committee' முட்டைகளுக்கு என்ன விலையை நிர்ணயம் செய்திருக் கிறார்களோ, அந்த விலையோடு போக்குவரத்துச் செலவாக 5 பைசா சேர்த்துத் தரப்படுகிறது.

கூடலூர் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர்.

* 627 திரு. எம். கே. கரீம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர் வழங்க உலக வங்கி உதவியுடன் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திட்டப் பணிகள் நடந்து வருகின்றன.

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவியோடு 11—8—1987-ஆம் ஆண்டில் ரூ. 2,821 இலட்சம் செலவில் நடைபெறவிருக்கும் 'ஹெலன் வாட்டர் ஸ்கீம்' இதுவரையிலும் முறையான வகை யில் வேலையைத் துவங்கவில்லை. அது எப்போது துவங்கப் படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1987-லே துவக்கப்பட்டாலும் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் சென்ற ஆண்டு நேரிலும்கூட சென்று இந்தப் பணிகள் துவக்கப்படுவதற்கு விரைவுபடுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டதன் விளைவாக இப்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அடுத்த மாதம்